# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 03.08.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 14885/F/2024**

திரு.இராஜாராம், -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
செங்கல்பட்டு மாவட்டம்-603 111.

******

**இறுதிஆணை**

இவ்வாணையம் 12.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.P.S.வரதராஜன், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் 17.06.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, மனுதாரருக்கு ந.க.எண்.1611/2026/செமா.3, நாள் 16.06.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் உத்தரவில் தெரிவித்துள்ளவாறு, அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கம் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலரின் எழுத்து மூல விளக்கத்தினை சமர்ப்பிக்க இரண்டு வார கால அவகாசம் கோரினார். அதனை ஆணையம் பரிசீலனை செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கால அவகாசம் வழங்கி, விளக்கத்தினை 01.07.2026 அன்று பொதுத்தகவல் அலுவலர் மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர்கள் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

2. அதனை தொடர்ந்து 01.07.2026 அன்று பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.P.S.வரதராஜன், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திருமதி.ப.வள்ளியம்மாள், (தற்போது மேற்பார்வையாளர், நகர் ஊரமைப்பு ஆணையரகம், 2, 3, (ம) 4வது தளம், E&C மார்க்கெட் ரோடு, கோயம்பேடு, சென்னை-600 107) மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திரு.க.ராகுல்குமார், துணை இயக்குநர், இணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் மாவட்டம்-632 001 ஆகியோர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில் மனுதாரரால் கோரப்பட்ட மனைப்பிரிவானது செங்கல்பட்டு மாவட்டம், பெருநகர வளர்ச்சி குழுமத்தால் தற்போது விரிவாக்கம் செய்யப்படும் பகுதியில் அமைவதால் மேற்கண்ட பகுதியில் அமையும் வரைபடங்கள் அனைத்தும் நகர் ஊரமைப்பு இயக்ககம், தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், மனுதாரின் மேல்முறையீட்டு விண்ணப்பம் செங்கல்பட்டு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு முகவரியிட்டு பெறப்படாததாலும், அலுவலக பதிவேட்டில் கிடைக்கப்பெறவில்லை என்றும் அதனால் மனுதாரர் கோரிய தகவல்களை 25.06.2026 அன்று நேரடியாக பொதுத் தகவல் அலுவலால் மனுதாரரிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை சான்றும், மேலும் தலைமை அலுவலகத்திலிருந்து தகவல் பெற்று வழங்குவதற்கு காலதாமதம் ஆகிவிட்டதாகவும், இனி வரும் காலங்களில் காதாமதங்களை தவிர்த்து உரிய காலக்கெடுவிற்குள் தகவல் விரைந்து வழங்கப்படும் என்ற விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்ததை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது.

3. மேலும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில் மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்படும் விண்ணப்பம் இவ்வலுவலகத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட கோப்பின் விவரம் கிடைக்கப்பெறாததால் மனுதாரரை நேரில் அணுகி மனுதாரர் கோரிய தகவல்களை 25.06.2026 அன்று நேரில் இணைப்புகளுடன் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஒப்புகை சான்றையும் கோப்பின் முழு விவரம் கிடைக்கப்பெறாததால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட காலதாமதத்திற்கு வருத்தம் தெரிவித்து இனிவரும் காலங்களில் காலதாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்த எழுத்துமூல விளக்கத்தினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்கையில், அப்போதைய பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கத்தினை ஆணையம் ஏற்கவில்லை. எனவே ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்தது.

- **இன்றைய விசாரணையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திருமதி.பெ.வள்ளியம்மாள், (தற்போது மேற்பார்வையாளர், நகர் ஊரமைப்பு அலுவலகம், CMDA அலுவலக வளாகம், E&C மார்க்கெட் ரோடு, கோயம்பேடு, சென்னை-600 107) அவர்கள் சமர்ப்பித்த விளக்கத்தினை ஆணையம் ஏற்கவில்லை. மேலும், மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல்களை வழங்காத (03.06.2024 தேதிய) அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**

**செங்கல்பட்டு மாவட்டம்-603 111 அவர்களுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)-ன் கீழ் அபராதம் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) விதிக்கப்படுகிறது. மேலும், அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்துவிட்டு அதுகுறித்த அறிக்கையினை அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், அவர்கள் 04.08.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும், அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.**

மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.P.S.வரதராஜன், திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திருமதி.ப.வள்ளியம்மாள், (தற்போது மேற்பார்வையாளர், நகர் ஊரமைப்பு ஆணையரகம், 2, 3, (ம) 4வது தளம், E&C மார்க்கெட் ரோடு, கோயம்பேடு, சென்னை-600 107) ஆகியோர்கள் 04.08.2026 அன்று அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பதிலாக 03.08.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அபராதத் தொகையான ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)-யினை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துகை சீட்டின் நகலினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்ததை ஆணையம் பதிவு செய்து, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 14885/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்-603 111.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (03.06.2024 தேதிய),**
**திட்ட உதவியாளர்,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**செங்கல்பட்டு மாவட்டம்-603 111.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ (07.10.2024தேதிய)**
**உதவி இயக்குநர்,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**செங்கல்பட்டு மாவட்டம்-603 111.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.இராஜாராம்,
எண்.144-111 காந்தி சாலை,
புலிப்பாக்கம் கிராமம்,
செங்கல்பட்டு வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்-603 002.

**<u>நகல்</u>**

இயக்குநர்,
நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் அலுவலகம்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
E&C மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).

Copy to: File NS/PA-